# Indian Polity Notes Part 8 in Tamil

## 8] அடிப்படைக் கடமைகள்

1976 – ம் ஆண்டு 42 வது அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம் 51 – A எனும் சரத்தை கொண்ட பகுதி IV – A இணைக்கப்பட்டு, அதன் கீழ் 10 கடமைகள் கூறப்பட்டது.

- 11 – வது கடமையாக 51 – A (k) என்பது 86 – வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின்படி (2002) இணைக்கப்பட்டது.
- இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி இந்தியக் குடிமக்கள் செய்ய வேண்டிய பல்வேறு கடமைகள் அடிப்படைக் கடமைகள் ஆகும்.
- இந்தப்பகுதியில் உள்ள அடிப்படைக் கடமைகள் நீதிமன்ற விசாரணைக்கு உட்பட்டதல்ல.
- சுவரன் சிங் குழுவின் பரிந்துரையின்படி அடிப்படைக் கடமைகள் இணைக்கப்பட்டது.

**அடிப்படைக் கடமைகள்**

(a) அரசியலமைப்பினை பின்பற்றுதல், அதன் குறிக்கோள்கள், அமைப்புகள், தேசியக்கொடி ஆகியவற்றிற்கு மரியாதை செலுத்துதல்

(b) நம் நாட்டு விடுதலை போராட்டத்தை தூண்டிய உயர்ந்த குறிக்கோள்களை பின்பற்றி போற்றுதல்.

(c) இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை நிலை நிறுத்திப் பாதுகாத்தல்.

(d) நாட்டினைப் பாதுகாத்தல் மற்றும் அழைக்கப்படும் போது தேசியப் பணிபுரிதல்

(e) சமயம், மொழி, வட்டாராம், பிரிவு வேறுபாடுகளை கடந்து, பொது சகோதரத்துவ உணர்வு மற்றும் இலக்கணத்தினை மேம்படுத்துதல், பெண்களின் மேன்மையை தாழ்த்துகிற பழக்கங்களை துறத்தல்.

(f) நமது பலவகையான பண்பாட்டின் உயர்ந்த பாரம்பரியத்திற்கு மதிப்பளித்து பேணுதல்

(g) காடுகள், ஏரிகள், ஆறுகள், வன வாழ்க்கை உள்ளிட்ட இயற்கை சுற்றுப்புற சூழலை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல், வாழும் உயிரினங்களுக்கு இரக்கம் கொள்ளுதல்.

(h) ஆய்வறிவு விளைவு நிலை, மனிதநலம், விசாரணை உணர்வு மற்றும் சீர்திருத்தங்களை மேம்படுத்துல்.

(i) பொது சொத்தினை பாதுகாத்தல் மற்றும் வன்முறையை துறத்தல்

(j) எல்லாத் துறைகளிலும், தனி மனிதன் மற்றும் கூட்டுச் செயல்பாடுகளில் முதன்மை நிலையை நோக்கி முயலுதல், இதன்மூலம் நாடு உயர்நிலை சாதனைகளை நோக்கி நிலையாக உயருகிறது.

(k) இந்தியக் குடிமகனாக உள்ள ஒவ்வொரு பெற்றோர் அல்லது பாதுகாவலரும், 6 முதல் 14 வயதிற்குட்பட்ட தமது குழந்தைகளுக்கு கல்விக்கான வாய்ப்புகளை வழங்குதல்

- இவைகள் தனிப்பட்ட குடிமகனின் கடமையாதலால் இதனை நீதிப்பேராணைகள் மூலம் வலியுறுத்த முடியாது.